உ

வேலுமயிலுந்துணை.

# பழநிப் பதிற்றுப்பத்தந்தாதி.

இஃது

முசிறியிலிருக்கும்

திருத்தாங்தோணி அப்பாவுபிள்ளை

குமாரர்

வச்கீல் ம-ள-ள-ஸ்ரீ,

**கல்யாணசுந்தரப்பிள்ளையவர்கள்**

வேண்டுகோளின்படி

ஷை முசிறியிலிருக்கும்

வித்வான் பிரம்மஸ்ரீ,

**தே-குரு-சுப்பிரமணிய ஐயரவர்களால்**

இயற்றப்பட்டு,

**ஷை கல்யாணசுந்தரப்பிள்ளையவர்களால்**

சென்னை:

பண்டித மித்திர யந்திர சாலையில்

அச்சிடப்பட்டது.

சுபகிருது௵ - ஆவணி௴

வர், நச்சவான்கொடைக்கல்யாணசுந்தரப்பேர்நட குணைல் கட்டபடு நெறியென், நச்சுவாகனத்திலேற்றியன்புடையாரகமகிழ்தரப்புரிந் தனனே.

---

காங்கயம் - அஷ்டாவதானம்

## சேஷாசலநாயுடு அவர்கள்

இயற்றியது.

கற்றுப்பச்சந்தாதிருமறைநேர்நகிலதரங்சல்னங்கண்கள்
சொற்றுப்பத்தந்தாதிகழுமயிலேவெயனைமடவார்த்துதியாதுஞ்ப
முற்றுப்பக்தந்தாதிமகிழ்பழநிமுருகாசழற்குருகிநற்ப
திற்றுப்பத்தந்தாதிதமிழ்வலசுப்பிரமணியன்செப்பினனே

---

நாமக்கல் ஹைஸ்கூல்தமிழ்ப்பண்டிதர்

## ம. சி. ஆனையப்பமுதலியாரவர்கள்

இயற்றியது.

பம்பராவரசுங்களிகொளப்பழநிப்பதிற்றுப்பத்தாகுமந்தாதி
வம்பரார்தொடைக்கல்யாணசுந்தரனும்வள்ளல்வேண்டியபடிகுசர்
கப்பராமாயணப்பிரசங்கங்கற்றவர்புகழ்ந்திடப்புரியு [குக்
மிம்பரார்சேர்த்திச்சுடபிரமணியவியல்வலோனியற்றினன்மாதோ.

---

முசிறி - வித்துவான்

## கு. அ. ஆறுமுகம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

மகன்றந்தைக்காற்றுதவியெனுங்குறளுக்கிலக்கியமாய்வந்தசீலன்
குகன்கழனிக்காதவுளன்கலியாணசுந்தரநற்குணவான்கேட்பச்

செகம்புகழுந்தென்பழநிப்பதிற்றுப்பத்தந்தாதிசெப்பினனென்றென்னகங்குடிகொண்முனிவனெனத்தமிழ்வலசுப்பிரமணியநாவலனே.

---

## முசிறி· வீ. அப்பாயிநாயுடு

### இயற்றியவை.

சுரும்பமரும்பொழில் சுலவுந்தென்பழநிவடிவேற் கைத்துணையின்மீது, கரும்பனையமொழிபுணர்த்திப்பதிற்றுப்பத்தந்தாதி கழறினால், விரும்புதமிழ்முனிவனெனவியனுலகுகொண்டாடும்விளக்கம்வாய்ந்த, பெரும்புலமைநிறைந்திடுஞ்சுப்பிரமணிய பாரதியாம் பிரபலோனே.

இப்பாக்கடமையெவரும்படித்துய்யவச்சதனிலேற்றினனா
லப்பாருஞ்சடைப்பரமனரும்பொருளாமாறுமுகனலர்ப்பூந்தாளைத்
தப்பாதுபழிச்சிடுவோன்சர்ச்சனர்கண்மணியனையான்சாமனுப்பால
செப்பாருங்கொடைக்குரிசில்கலியாணசுந்தரனுஞ்சீர்த்தியோனே.

---

## திருநயம் - அருட்கவி
## நரசிம்மபாரதியாரவர்கள்

### இயற்றியது.

வன்னமுதலிலக்கணவைவாரிதியுண்டசத்தியன் போன்மறைக்குலத்தின், மன்னமுதவாணிவிலாசப்புலவன்குருசுப்ரமணியன் யாரும், பன்னமுதனுக்குநிகரெனப்பழநிவேள்பதிற்றுப் பத்தந்தாதி, சொன்னமுதவுநகொடைக்கல்யாண சுந்தரன்கேட்கத் தொடுத்திருந்தானே.

---

## இந்நூலாசிரியர் மாணாக்கருளொருவராகிய

பரம்பக்குடி

## சு. கோபாலய்யங்காரவர்கள்

இயற்றியது.

பூமேவுபழநிமலைத்தண்டபாணிபொன்னடிக்குப் புலவரெலாம் புரிந்துபோற்றப், பாமேவுபொருணான்கும்பயப்பதாயபதிற்றுப்பத் தந்தாதியெனும்பாமாலை, மாமேவுகுருசுப்ரமணியனென்றுமன்னு பெயர்க்கேற்பவெணைமாணாவோர்க்குத், தூமேவுகுரவமைந்தோன சொலக்கல்யாணசுந்தரவேளச்சிட்டுசெதுலக்கினானல்.

---

மதுரைஜில்லா தேவகோட்டை

வெ. ஆ. தி. மாயாண்டிசெட்டியாரவர்கள்

குமாரர்

## சிதம்பரச்செட்டியாரவர்கள்

இயற்றியது.

திருமேவுபழநிமலைக்கந்தசாமி செவிமடுப்பத்தமிழ்ப்பதிற்றுப் பத்தந்தாதி, குருமூர்த்தியந்தணன்செய்தவத்துதித்துக்குலாவுஞ்சுப் பிரமணியன்குணத்தான்மிக்கோ,னொருமேவன்பியல்கெழுமவழுத் துத்தாங்குரைத்தனனிவ்வுலகரிதையோதியுய்வான், கருமேவுமெ ழின்முசிறிதன்னில்வாழுங்கலியாணசுந்தரமாலச்சிட்டானே.

---

உ

முருகக்கடவுடுணை.

# பழநிப் பதிற்றுப்பத்தந்தாதி.

## காப்பு.

பூமேவுபொழில்சுலவும்பழநிமலைக்கலையுணரொண்புலவர்க்கோங்கு
தூமேவுபதிற்றுப்பத்தந்தாதித்தொடைமாலைதொடுத்துச்சாற்ற [ந்
மாமேவுமதுரச்சொன்மலர்நான்குமுழங்கிடுநல்வளத்தைவான் கோ
காமேவுவான்கடத்தனீர்க்கடத்தைக்கவிழ்த்தகடக்களிறுதானே. [ன்

## நூல்.

உலகெனுமணங்குக்கிட்டவொளிநுதற்றிலதமென்னப்
பலர்புகழ்ந்துரைக்கத்தக்கபழநியிற்றண்டபாணி
யலகிலாமலைகளொப்பவடியனேனெஞ்சக்கல்லு
மிலகுறுகோயிலாக்கொண்டிருந்தனன்பொருந்துமென்றே. (க)

* என்றுபன்னிரண்டுந்தம்முளிணைந்தொளிபரப்பியிட்டாங்
கொன்றுநற்பவளமேனியொளிசெயக்கருங்கட்டோகை
துன்றியமயின்மீதேறித்தொன்னிலமுழுதுஞ்சூழ்ந்த
நன்றுறுபுகழோன்செய்யபழநியனலமெற்கீமே. (உ)

ஈகுவர்பெரிதும்வித்தமெனக்கலமாந்தர்தம்மைப்
போகுயர்பெருமைசொற்றுப்புகழ்ந்திடாதுமையின்சேயைப்
பாகுறுபொழில்சுலாமொண்பழநியிற்பெருமான்றன்னை
வாகுறுதமிழாற்பாடிமகிழமுன்பெண்ணேற்றேனே. (௩)

---

* என்று - சூரியன்.

நோற்றவொள்ளறுமீன்மாதர்நசுப்பிறமுலைப்பாலுண்டு
சாற்றரும்புகழ்மையந்தத்தையலார்க்களித்தவைந்தன்
பாற்றிரைத்திருவாழுந்தென்பழநியம்பதியாள்கந்தன்
சேற்றுறுக்கமலத்தாட்பூச்சிதடனேன்முடிக்குரித்தே. (௪)

உரிமையிற்பெரியவன்றேயொருமுறைவணங்குவோர்க்குத்
தருநிழலிருக்கையாதிதருகுவையென்றுனின்றட்
பெருமையையெவரேகண்டுபேசிடத்தக்கநீரார்
பருமணிகிடந்திமைக்கும்பழநியிற்குடிகொண்டோனே. (௫)

கொண்டலேகரியகூந்தல்குவிமுலைகனகச்செப்பே
மண்டலமதியேதுண்டமெனத்தினமகளிர்தம்மை
விண்டுதண்டலைசூழ்ந்தோங்கும்பழநியில்விசாகன்றனைக்
கண்டவன்புகழைவாழ்த்தாக்கலர்க்குமோர்கழுவாயுண்டே. (௬)

உண்டெனக்கிணையாய்வேறுதெய்வமென்றொருவாற்றானு
மிண்டுறுமனத்தரேனும்விளம்பிடத்துணியாரென்றாற்
பண்டிதராயினெங்ஙன்பகர்தரலிலையேயெங்கும்
வண்டுபொண்மிழற்றுமல்லற்பழநியில்வளர்செவ்வேளே. (௭)

வேள்கழைச்சிலைகுழைத்துவெறிமலர்ப்பகழிபெய்ப்பன்
னாள்களும்வருத்தநைந்துநங்கையர்க்கடிமையாயுன்
றாள்களைமறந்தபொல்லாச்சழக்கனேன்றனையாள்வாயோ
நீள்கிரிப்பழநித்தேவாநினதுளங்கிருபையுற்றே. (௮)

உற்றருச்சனைசெய்தேத்துமொருமறைச்சிறுவற்காப்போய்
சொற்றுமுன்பருள்செய்தோன்றனேன்றலென்றனையடுத்தேன்
கற்றவர்புகழ்ந்துபாடும்பழநியிற்கந்தாவென்பாற்
சற்றுநீகருணையின்றித்தவிர்வதுதகுதியன்றே. (௯)

அன்றறிவாமென்னுமலறஞ்செயப்புகுவார்நின்னை
யொன்றியோர்முறைவணங்கலொன்றுமேயமையாநிற்ப

மன்றவெங்கானஞ்சென்றுவருந்தியோகுழந்துநிற்ற
லென்றிருப்பொலிந்தோங்குந்தென்பழநியிலீசன்சேயே. (௧0)

வேறு.

சேயவன்கலர்க்குத்தொழும்பினர்க்கணியன்றிசழ்வடிவேற்கரத் தெங்கோன், மாயவன்பிறவிநோய்க்குறுமருந்துமகிமைசேர்பழநிமா மலையான், றூயவன்றெய்வயானைநன்கணையுந்துணெனச்சொலத்த குந்தோளா, ஞயவனெனக்குவேண்டியவனைத்துமகமகிழ்ந்தளித்தரு ள்பவனே. (௧௧)

அருவினைப்பெறுவான்பொறிவளர்பழநியமர்ந்துறைசேயையண் டருக்கா, யருளினைப்பெறுவெஞ்சூர்முதறடிந்தவ்வாய்ந்தொளிர்வே ன்றியால்விளங்கி, யிருளினைத்துரக்குமுயர்பிரதாபமெய்ந்தெனச்சி வந்தமெய்ம்முதலை, வெருளினைத்தொழும்பர்க்ககற்றியாண்டருளு மெய்ப்பொருடன்னையேத்துவமே. (௧௨)

† துவமிலாவுடலைத்துவம்மனக்கொண்டுதொன்முறையொழு க்கத்தைமறந்த, தவமிலாப்பதிதனென்னையாண்டருளுந்தன்மையே தண்ணளித்தன்மை, நவமிலாவேதமனுக்களைமறையோர்நவிலக்கே ட்டெழிற்கிளிநவிலு, மவமிலாவளங்கொள்பழநியிற்குடிகொளாண டலைக்கொடியுயர்தசேயே. (௧௩)

உயர்வணைப்பழநிபுகந்தமர்கந்தவுனைப்புகலென்றுவந்தடுத்து, ம யர்வினைதவிர்த்தெற்கருளெனக்கதறுமாற்றமுன்செவிப் புகவிலை யோ, பயமுறுங்கடல்சூழ்புவியெலாங்காதும்பார்த்திடுங்கண்களும்ப டைத்த, நயமுறும்பிரமங்குகனெனமறைகணவிற்றிடுமொழிக்குணா யென்னே. (௧௪)

என்னநல்வரமுந்தொழுதவர்தமக்கிங்கிதமறிந்துதவியாலின்ற, பன்னிருகரனைநான்குமாமுகனைப்பகருஞ்சிறைக்க ளத்துறுத்துத்,

† துவம் + இலா - அசையாநிலையில்லாத. (அழிதலுடையதென்றபடி.)

துன்னுமைம்முகற்குப்பிரணவப் பொருளைச்சொல்லியவாறுமாமுக ளைப், பொன்னுநன்மணியும்பொலிந்துறும்பழநிப்பொருப்பிடைக்க ண்டுவந்தனனே. (௧௫)

உவந்துனைவணங்காத்தலையுநின்புகழையுரைத்திடாச்சிறுவாயு ங்*கோளி, லவந்தருபொறியிற்குணமிலவென்றவரும்பொருளறிந்தி ருந்தன்றோ, பவந்தனைப்போக்குங்கழல்பணியாதும்பன்னுமுன்புகழ் வழுத்தாது, நவந்தருமெழில்கூர்பழநியிற்பெருமநாள்பலகழித்தனன் வறிதே. (௧௬)

வறியருக்கிரங்கிப்பிடியனமேனும்வழங்கி டாதுண்டவச்சைய னாய்ச், சிறியவைச்சார்ந்துபயனிலபிதற்றித்தீயசெய்துழன்றனனெ னினு, மறியுடைக்கரத்தோன்மதலையைப்பழநிமலைத்தலைநிலைத்தசெ வ்வேளைக், குறியிடைக்கொண்டுதுதித்தனன் † கூற்றங்குதித்தலு மென்கைகூடியதே. (௧௭)

கூடிவண்பழநிப்பொருப்பிடைக்கோயில்கொண்டமர்தண்டபா ணியையுன், னாடிடவரியதிருப்புகழ்பாடிநாத்தழுதழுப்பவேத்தெ டுத்து, நீடியநயனநீர்த்துளிதுளிப்பநெஞ்சநஞ்சுருகிடக்கண்ட, பீடி யன்மணிதப்பிறவியேபிறவிப்பெரும்பயன்பெற்றதித்தலைக்கே.

தளைவளர்பொருள்களனைத்தையுநோக்கத்தண்மைசேர் வெண் மதிக்கிடர்செய், திளைவளரமுதமொழிகிளர்வதனச்செம்மதியிரண் டுமூன்றோடும், புனைவளரகன்றில்வளைபகிர்ந்தோங்கும்புயமலையா றிரண்டுடைய, வுளைவளர்பழநித்தனிமுதற்கடவுளொருவனையன்றி வேறிலையே. (௧௯)

---

* கோளில் பொறியிற்குணமிலவே யென்றதிருக்குறள் போல வீண்டுங் கோளில் என்பதற்குத் தத்தமக்கேற்ற புலன்களைக்கொள் ளுதலில்லாத வெனப்பொருள் கொள்ளத்தக்கது.

† கூற்றங்குதித்தலும். என்றது - கூற்றங்குதித்தலும் - என்ற குறள் போன்றது.

இலையுனையல்லான்மற்றொருதெய்வமென்றௌந்திருந்தினன்பழநிக், கலையுணர்புலவநின்கழற்கமலங்கருத்திடைநிறுத்தினன் கலந்தன், மலையினைவலம்வந்தனன்குறையெல்லாம்வகுத்தெடுத்துரைத்தனனெனக்கு, வலை†யருள்புரிககலியுகத்துகந்தவரங்களைக்கொடுத்தளிப்பதற்கே. (உ0)

வேறு.

அளிமலர்ப்பகழியானலைக்கநொந்துளங்
களிமயக்குறத்தமைமறந்தகாமுகர்க்
கொளிவடிவுடையவுன்னுருக்கண்கூடுமோ
தளிமலர்த்தடஞ்சுலாம்பழநிநாதனே. (உக)

நாதமுங்கடந்தொருநான்கெனப்புகல்
வேதமுங்கடந்துயர்விரிஞ்சனுதியோர்
போதமுங்கடந்தமெய்ப்பொருளினொண்மலர்ப்
பாதமும்பழநியிற்பார்த்துய்ந்தே*னினே. (உஉ)

இன்றெனக்கருள்செயாதிருத்தனீதியோ
வுன்றனைக்களைகணென்றுணர்ந்தடைந்தயான்
சென்றினிப்பிறருக்கென்சிரத்தைத்தாழ்ப்பலோ
குன்றிடைப்பழநியிற்குடிகொளெந்தையே. (உ௩)

எந்தையுமென்னையீன்றெடுத்தவன்னையு
நிந்தையில்குருவொடுகிளைக்குந்தெய்வமு
முந்தையினெனக்குலுமுழுதுமென்னுடைச்
சிந்தையிற்குடிகொண்டபழநிச்சேந்தனே. (உ௪)

---

* இன்னேஎனற்பாலது - இனேயென விகாரப்பட்டது. இதற்கு இன்றேயெனப்பொருள்.

† வல்லைஎன்றது - வலையெனவிகாரமாயிற்று.

சேர்ந்தனைப்பழநியிற்றிகழுஞ்செம்மலைத்
தீந்தமிழ்க்கவிசொலித்தினைத்தலின்றிவீண்
மாந்தரைப்புகழ்ந்தணிவகுத்துப்பாடுவோர்
சாந்துணைச்சமனுக்கென்சாற்றுகிற்பரே. (உரு)

சாற்றரும்பெரும்பவச்சலதிதாண்டவா
னேற்றிருங்கடலுடனுடங்கவாடிவேலன்
போற்றரும்பழநிமன்புகழ்ப்பயோததி
யூற்றிடைமூழ்கினேனுறுதியெய்துமே. (உசு)

எய்தருமிடமெலாமெய்திப்போய்ப்பொருள்
செய்துமெய்வருந்துவீர்திகழுமெய்ப்பொருண்
மைதுறும்பழநியம்மலையின்மாணிக்கங்
கைதனிற்கிடைத்திடுங்கண்டுகொண்மினே. (உஎ)

மின்னுமின்னிகர்த்தபொய்மெய்யினோய்கெடப்
பன்னுநன்மருந்துகள்பரிந்துதேடுவீ
ரன்னுநம்பிறவிநோயொழிக்கும்வேட்பெயர்
மன்னுமொண்பழநியின்மருந்தைத்தேடுமே. (உஅ)

மேவுகபழநியைவிளங்கொண்காவடி
காவுகபுபத்தர்களாந்துகந்தனைக்
கூவுகசரணெனக்குவலயத்துளீர்
தூவுகபதத்தலர்தொலையுந்துன்பமே. (உகூ)

துன்பினைத்துடைத்துவான்சுரரைக்காத்தவேட்
கன்பினிற்பழநியையடைந்தவன்கழ
லென்புநெக்குருகநின்றேத்துமாந்தரைத்
தென்புலத்தவன்றொடான்றிண்ணந்திண்ணமே. (௩0)

வேறு.

திண்மைசேர்கொடுங்கூற்றுவன்பாசமுஞ்சினமுங்கொண்டடர்ப்பானவன், கண்மைசேர்கரும்பகட்டிடைவரும்வழிக்கலங்கலென்

றெனைக்காக்க, வொண்மைசேர்வடிவேலொடுகருணையுடன்கொ
டுமயிலேறித், தன்மைசேர்பொழிற்பழநியிற்கடம்பத்தாரணத்தில்
வருவாயே. (ருக)

வாய்ந்தபன்மணிவெயில்செயும்பழநியம்மலையினிற்குமரன்ற
னாய்ந்தவொண்மலர்ப்பதயுகளங்களுக்கன்புசெய்யடியானா
மாய்ந்துதித்தவொழிப்பிரமேந்திரர்வளர்பதங்களுக்கப்பா
லேய்ந்தவொண்பதத்தவர்களுமேக்கறவிருத்துவரின்பத்தே. (ருஉ)

தேமணுண்மலர்த்தும்பையந்தொடையலைத்திகழ்தரவணிந்தேற்று
நாமவேலெறிந்தசுரரைத்தடிந்துமுன்னளிமலர்ப்பதம்பூண்ட
கோமணுகியர்ப்†புரந்ததென்பழநியிற்குழகநின்சரண்புக்கேன்
காமமாதியபகைதுமித்தென்னையுங்கடைக்கணித்தருள்வாயே. (ருங)

கடைக்கணிவ்வுடல்கழிந்துழிமக்களுங்கழிமகிழ்ந்துனைக்கூடும்
படைக்கணெண்மதிமுகவெழிற்பெண்டிரும்பரிவுடைக்கடும்பாகி
யிடைக்கண்வந்துறுமென்றுமுன்பின்வரவியையிலாதுதிண்ண [சே.
மடைக்கண்வாளைபாய்பழநியின்முருகனைவழுத்துணைதுணிநெஞ்

நெஞ்சமேநனிதுனிக்கிடமாகியநெடும்பவக்கடலுண்டி
யுஞ்சவாழ்ந்திடவேண்டிடிலொருமதியுணர்த்துவல்கருத்தாய்க்கே
ளஞ்சுமாமுகன்மகன்குகன்பழநியிலாண்டலைக்கொடியோன்சாற்
கஞ்சமேபுணையனவரதமுமதைககருதுகசிரஞ்சேர்த்தே. (ருச)

சிரத்தையோடுதென்பழநியிற்கடவுடன்றிருவடித்துணையெண்ணு
வரத்தைவேண்டியபடியுனக்கருண்மெனகுத்துணைத்தனன்பல்கா
மரத்தைநேர்தரவுணர்கிலையவற்றினைமறந்தனையினிமேனீ [ன்
பரத்தைமேவுவதெங்ஙனம்பொறிவழிப்படர்ந்துறங்களிநெஞ்சே.

களிகொண்மாந்தரின்மடந்தையர்கண்களைக்கமலநன்மலர்வேல்
வா, ளிகள்சேல்களென்றுரைத்தவர்மையலினலைந்தழன்மடநெஞ்

† கோமணுதியர் - இந்திராதிதேவர்.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

சே, விளிகொள்காந்தையர்குன்றதுங்கிணைசொலும்விழியெலும்புக
ணேக்கி, நளிகொள்வேட்கைநோயொழித்தொருபழநியிளையகன்கழ
ல்வேண்டே. (௧௭)

வேண்டுமென்பருக்குவப்புறவரவர்வேண்டியதிருக்கோலம், பூ
ண்டுசென்றயர்வரங்களைக்கொடுத்தருள்பொழிந்துடன்புரக்கின்ற
நீண்டுயர்ந்தொளிர்பழநியம்பொருப்பனைநினைக்குமென்றனிநெஞ்ச
மீண்டுமற்றையதேவரைக்கனவிலும்விரும்புமோவிரும்பாதே.

விரும்புநெஞ்சினிற்குடிகொளும் பழநியில்விமலனின்பெற்றி
மையைச்,சுரும்புணம்புயத்திறைகொளுமிறைவனுஞ்சுருதியாயிரத்
தாலாய்ந், திரும்புணெஞ்சுறவின்னமுமுணர்கிலனென்பரேற்றெளி
வில்லாத், துரும்புநேர்வருஞ்சிறியன்யானெங்ஙனந்துணிந்துரைத்
திடுமாறே. (௧௯)

மாற்றுயர்ந்தபொற்பணியணிந்தகங்கவர்மலைமுலை†தனங்காட்டி
க், கீற்றுவெண்மதியொளிநுதற்றிலகித்துக்கிளர்நகைமுகங்கோட்டி
க், கூற்றுநேர்விழித்துணைகொடுமருட்டிடுங்கோதையர்க்குடைந்தே
ற்கும், போற்றுவோர்க்கருள்பழநியிற்குகவருள்புரிசரண்புகுந்தே
னே. (௨௦)

வேறு.

தேனேபருகத்தெவிட்டாவமுதே
மானேயெனும்வாள்விழிமான்மகளிர்
கோனேபழநிக்குகஞானிகள்காண்
போனேயரனார்‡பொருளேயருளே. (௨௧)

அருள்வாரிதியேயமர்செம்மணியா
விருள்வாய்பதுமமெழில்வாய்ந்தலரும்

---

† தனம் - தனனம், என்பதன் விகாரம், சொஞ்சமெனப் பொருள். ‡ பொருள் - பிள்ளை.

பொருள்வாய்பழநிப்பொருப்பார்கணியே
தெருள்வாரவையேதெளியேற்களியே. (சஉ)

களித்தான்றனைக்காரணங்காட்டுதனீர்க்
குளித்தான்றனைத் *தீக்கொடுதேடுதலென்
றொளித்தானிலையெற்குலகின்மயல்சீத்
தளித்தான்பழநிக்குகன்வந்தடுத்தே. (சங)

அடுக்காப்புகழ்பல்லவுரைத்தடுத்தே
கொடுக்காக்கலர்பாற்கொடுவென்றிரவா
மிடுக்காக்குகவெற்குவிளைந்துருக
தடுக்காப்புகழ்கூர்பழநித்தனமே. (சச)

தனமேயுறதிப்பொருளித்தரணிக்
கினமேலுலகொன்றிலையென்றுகொளும்
மனமேயுனக்கம்மயல்சீத்தருளு
மனமேய்பழநிக்கிறையங்கடையே. (சரு)

அடையாரிவரங்கவர்நண்பினரா
† விடையாருவரென்றுகொளாதெவரு
முடையாரெனையென்றெணுமோங்குணர்வைக்
கொடையார்பழநிக்குகநல்குவையே. (சசா)

வையந்தனிலுற்பவிப்பான்மைதல்
செய்யின்பழநிச்சிலம்பாவெளியே
னுய்யும்படிநின்னுடைமைக்கெழுதென்
கையும்முளையுங்கருத்தும்மினியே. (சஎ)

---

* தீ - என்றது - களித்தானைக்காரணங் காட்டுதல் என்ற குறளிற்போல ஆகுபெயரானீண்டு விளக்கினை யுணர்த்திற்று.

† இடையார் - கொதமலர்.

இனியேனுமெனக்கிரங்காதிருந்தா
லனியாயமிதென்றறையுந்தொழுக்
கனியேயப்பழநிக்கருணைக்கடலே
யினியேயருள்செய்யுமிப்பொழுதே. (௪௮)

பொழுதோர்ந்தறியாப்பொழில்சூழ்பழநிப்
பழுதேதுமிலாப்பரம்பின்றலைவா
தொழுதோர்முறைநின்றுணைத்தாள்பரவ
வெழுதாத்தலையோரெவரும்பதரே. (௪௯)

பதரொத்துலகெங்குமிகப்பரந்தே
யுதரத்தினையேவளர்த்துன்பொருட்டா
மிதரத்தொழில்செய்திலன்மால்பழநிக்
குதரத்தலைவாவருள்செய்குவையே. (௫0)

வேறு.

குவையாநிதித்திரளைக்கொடுக்காமற்புதைத்துவைக்கு
நவையாருமாந்தர்களேநாவடக்கிவிக்குள்வரிற்
† சுவையாரும்புளிவிளவின்காயாகுஞ்சொன்னபொரு
ளவையாவும்பழநிமலையடிகளுக்காக்குதிர்முனமே. (௫௧)

‡ முன்னுமெளியேனுளத்தின்முகங்களிருமூன்றொடுகை
பன்னிரண்டுமொளிவடிவும்பலமுறையுந்தோற்றியுடன்
மின்னிகர்ப்பவொளித்திடுமுன்வித்தையிதெனைப்பொழுது
மன்னியருள்புரிபழநிமலைமுருகநம்பினனே. (௫௨)

நம்பிரியப்படும்பொருளைநறுந்தமிழைக்கேட்டளிப்பா
னம்பிரியப்படுமுகிற்கல்லகப்பழநிக்கிறையிருப்பக்
கம்பிரியப்படுவகளத்தக்கடம்பனைவிட்டிழிநரைத்
கம்பிரியப்புடிபுகழ்ந்துதகையிழப்பர்சழக்கினரே. (௫௩)

---

† சுவையாரும் புளிவிளவின் காயாகும் என்றது பொன்னும் புளிவிளங்காயாம் என்றாற்போன்றது. ‡ முன்னல் - நினைத்தல்.

சழக்குறுமிப்பிரபஞ்சத்தணிவண்த்துன் குழந்தையெனை
யுழக்குறுமைம்புலவேடர்க்குறக்காட்டிக்கொடுத்தொளித்தாய்
குழக்குறுமக்களைப்பயந்தகுரவருக்கிக்கொடுமையடா
திழக்குறும்பொய்ம்மொழிப்பழநிக்கெந்தையெதிர்த்தருண் முறையே

முறையீடுகேட்டெனதுமுழுக்குறையுந்தீர்த்தருளத்
தறையீடுசொலவரியதடம்பழநிக்கடம்பர்வொண்
சிறையூடென்கருங்கணுடைச்சிகியிலிவர்ந்திருபுடையு
நறையூடுமொழிமகளிர்நண்ணவரவென்றுரையே. (௫௫)

உரைக்கரியதிருப்புகழையுரைத்துரைத்துன்றிருவுளத்தைக்
கரைக்கவுமென்பொருட்டஃதுகரையாதபரிசென்றோ
பரைக்கொருமைந்தாபழநிப்பண்ணவனேநீயிறைகொள்
வரைக்குலத்துளொருவரையோநின்மனதும்வகுத்தருளே. (௫௬)

வகுத்தானைபுலகனைத்தும்வரைபகிர்ந்துதாரகனைச்
செகுத்தானைக்கொடுநரகிற்சினர்திருந்துந்தொழும்பினரைப்
புகுத்தானைக்கலையுணர்ந்தபுலவனையென்னிடத்தினரு
டொகுத்தானைப்பழநிமலைத்துரையையினிமறக்கிலெனே. (௫௭)

மறம்பயிலும்வாட்கணிமவரைக்கரும்புதருமுத்தை
யறம்பயிலும்யோகியர்நெஞ்சகத்திலொளிர்மணிவிளக்கை
நிறம்பயிலுமயிலிவருநெடும்பழநிமலைமுருகைத்
திறம்பயிலுந்தொல்வினைநோய்தெறுமருந்தைத்துதிப்பேனே.

துதிக்கருநற்புகழ்க்கடற்றுத்தலங்குறுபன்னிருகட்டு
மதிக்கருமொண்சிகிமேற்றென்மனத்திருக்கும்பூந்தாட்டுக்
கொதிக்குமொளிரிலைவேற்றுக்குக்குடஞ்சேர்கொடியுடைத்துப்
பதிக்குளுயர்திருப்பழநிப்பருப்பதத்திற்செழுந்தேனே. (௫௯)

செழும்பொழில்விண்ணுலகளக்குந்தென்றிருவாவினன்குடியிற்
கொழும்புவிமக்களுக்கருளக்குடிகொண்டகுருமூர்த்தி
தொழும்பினருக்கெனவெனக்குந்தோமிகுமிச்சகமயக்கில்
விழும்பரிசுதடுத்தளிக்கவிரைந்தெழுந்ததற்புதமே. (௬௦)

வேறு.

* தமரக்கடலுண்டமிழ்முனிக்கேதமிழ்த்தீங்கடலும்புகட்டியகோன்
குமரக்கடவுள்பழநிமலைக்குறமான்முலைக்குங்குமமார்ப
னமரர்கதிபன்றிருவடிநெஞ்சகத்திற்கருதாதாயுளைவீண்
கமருக்கிறைப்பார்போற்பலவுங்கருதிக்கழிப்பார்கடையாரே. (சுக)

யானைக்கலந்தோகுறையிரப்பவிரத்தக்கவனுநீயிருப்ப
நீரைக்கொடுமாவினுக்கெனவுநிலத்திற்பிறர்பாணிகழ்த்தறியே
னூனைப்பொழில்சூழ்பழநியைமிக்குவந்தோய்தண்டாயுதபாணி
பானைப்புசித்தோனெழின்மருகாபரிந்தென்குறைதீர்த்தருள்வாயே.

தீர்த்தத்துயர்சண்முகநதியிற்றினமும்படிந்துசெழுமலர்கள்
பார்த்துப்பறித்துக்கொணர்ந்தவற்றைப்பரிவோடாய்ந்துபலவிதமா
யார்த்துத்திருவாவினன்குடியிலழகார்குழகன்றிருவடிக்குச்
சார்த்தக்கொடுக்குந்தொழும்பினைச்சாரான்மறலிபாரானே. (சுங)

பாருக்கிடுக்கணொழித்தளிக்கப்பருமாமணிப்பூண்பாண்டியனுய்ப்
போருக்கடுக்குங்கருங்கடலைப்பொருவேல்விடுத்துப்போக்கியவுன்
ணீருக்கடுக்கவெனதிடும்பைநெடுங்கார்க்கடலுந்தொலைத்தளிக்க
மேருக்கடுக்கும்பழநிமலைவிமலாகரங்கொள்வேற்படையே. (சுச)

படைக்குந்தொழிலைப்பிரமனுக்குப்பழக்குங்கடவுள்பழநிமலை
யிடைக்கும்பமுனிக்கருள்புரிந்தவிலைவேற்கரத்தோன்றிருவடிநின்
னடைக்கும்பிறர்நோய்கண்டிரங்கிநயக்குங்கொடைக்குமுன்றனக்குக்
கிடைக்குங்கிடைக்குங்காத்திருநீகெடுப்போர்மதிகேட்கிறநெஞ்சே.

சேவையுகைக்குந்தனிச்சரபஞ்சிகிவாழ்சிமையத்திமயமலைப் [ஞ்
பூவைமொழிமான்விழிப்பிடியைப்புணர்ந்தின்றெடுத்தவிளஞ் †சிங்க

---

* தமரம் - ஒலி. † பிறப்பிறப்பைக் கொடுக்கின்ற மாயையை யானையெனவுருவகப்படுத்தினதற்கேற்ப முருகக்கடவுளைச் சிங்கம் எனவுருவகப்படுத்தியது.

சாலையுயிர்க்குப்பிறப்பெனுநோய்தன்னோடளிக்குமாலையமத
மாலையழித்தாண்டருள்புரிவான்வாழும்பழநிமலைதனிலே. (சுசு)

மலையிற்சிறக்குஞ்சிவகிரியாமலைமேற்பழநி * வள்ளலுனை [கோ
† யிலையிற்சிறக்குமிடைக்கொடியோடிபஞ்சேர்தரு வென்றியம்பிடு
தலையிற்கலையோன்புகன்றபடிதருவிற்பழநீயெனப்புகல்கோ
கலையிற்றலையோயெவ்விதமிக்கடையேனுரைத்துப்புகழ்வதுவே.

புகழ்ப்பிறர்கண்டெனையுனையேபோற்றிப்பணியும்புணணியர்போ
லிகழத்தகுநான்பொய்வேடமெடுத்துநடித்தேனிவ்வொழுக்க
நிகழத்தெரிந்தெனக்கொளிக்குநீர்மையுணரேன்சூர்மயிலாத்
திகழப்பணிகொள்பழநிமலைத்தேவாபொறுத்தாடிருத்தகவே. (சுஅ)

திருமான்கலைமானுடன்குடிவாழ்சீர்சால்பழநித்திருமலையி
லொருமான்பயந்தகுறக்குலமானுள்ளஞ்சிவக்கமுடிசிவக்கும்
பெருமான்சிறியேனபதியெனப்பிறங்கும்வலையிற்பிடிபடவுங்
கருமான்மிகுக்குமாயையெனுங்கைம்மான்முதுகுகாட்டியதே.

காட்டுக்கிறையின்றிருமருகாகனகசபைக்கண்கவுரிமகி [ன்
ழாட்டுக்கிறையினெழிற்புதல்வாவவுணர்க்கிறையையழித்துயர்பொ
ன்னாட்டுக்கிறையின்றுனிதவிர்த்தேய்நலஞ்சேர்பழநிநாக்கிறையெ
பாட்டுக்கிறையுமனமிரங்காப்பரிசென்விளைந்துபகர்வாயே. [ன்

பகரரியதுன்பமுறுந்தமியேன்றன்னைப்பார்த்தருளத்திருவுளத்
துப்பரிவுகொண்டு, புகரரியபழநிமலைப்புலவாவந்தப்பொருப்பிலி
ருந்தொருமுறைநீபுறப்பட்டெனக, ணிகரரியசிகியிவர்ந்துவந்தாலு
ன்றனிகழ்ந்தரிய பெருந்தகைமைநீங்காதிந்த, நகரரியநுந்தையுமுன்
னுவலூரன்றறமிழ்க்குத்தூதாகிநடந்தானன்றே. . (எக)

---

* பழம் - நீஎன முருகக்கடவுளைச் சிவபெருமான்சொன்னார். என்பது - தலபுராணத்திலுள்ளது - கலையிற்றலையோய் என்றது. கலைபுணர்புலவன் என்றாற்போல்வது.

† இலையிற்சிறக்கு மிடைக்கொடி - வள்ளியம்மை - தழையையுடுப்பது குறவருக்கியல்பு இபம் - தெய்வயானையம்மை - தலையிற்கலையோன் - சிவபெருமான்.

நடந்தருபொன்னளினமலர்க்காலன்பாலனுற்கோட்டுக்கரிவளர்த்தநலஞ்சேர்பைம்பொற், கடந்தருநற்குயத்தியொடுகுறத்தி காமக்கடல்கடக்கப்புணையாகக்கற்றோளீந்தான், மடந்தருமிச்சமயக்கவிருளைமாற்று மணிவிளக்கென்றுரைத்தகுதன்மலர்த்தாள்சேட்கிற், றிடந்தருவனுனக்கொளியானெஞ்சேநீபோய்த்தென்பழநி மலையிலவன்றிறத்தைநாடே. (எ௨)

நாடருமிவ்வுலகத்துக்காணப்பட்டுநசித்தலுறும் பொருள்களின்கணாசையுண்டாகும், பீடருமென்மனத்தாசைப்பேயைப்போக்கப் பேராசைகொண்டனைப்பேறுநல்க, வீடருமுன்றிருவுளத்திலிரங்கவேண்டு † மிணைவிழைச்சினிடைவிரலுக்கிடுபொற்பூண்பின், கூடருமப்பொழுதுகரத்தொடியாங்கொள்ளுங்குலமகளிர்வளர் பழநிக்குமரவேளே. (எ௩)

வேளையிதுதனிற்சிறிதுவிழியானோக்கவேண்டுமெனப் பல்விதமும்வேண்டிக்கொண்டேன், றளைமுடிக்கணியாக்குந்தமியேன்மாட்டுத்தன்னமுமுள்ளிரங்காததகையீதென்னே, வாளைமலர்க்கயங்குடையுமகளிர்க்கஞ்சிமருண்டுகுதிகொளத்தாக்கிவளர்பூம்பூகப், பாளைகிழிந்துதிர்தரளம்பணிலமீன்ற பருமணியிற்கிடந்திமைக்கும்பழநித்தேவே. (எ௪)

தேவளருந்திருக்கோட்டஞ்சேர்வாயென்றுசெப்புமுன மனக்கோட்டஞ் சேர்வல் ‡வேட்பேர்க், கோவளரும்பறம்பினைப்போய்க்கூடுகென்றாற்கோதையர்தங்குயத்தினையேகூடப்போவேன், றாவளரும்வேற்கையுனைத்துதியேனின்னே தோ முடையேற்கெங்ஙன்முன்றுணைதாள்கிட்டு, மாவளருந்தொழுத்தோறுமமுதஞ்சிந்தியாறெதிர்க்கும்பழநியின்கணமருங்கோவே. (எ௫)

கோவென்றுகடும்பினர்முன் குரவிட்டேங்கக் கூற்றுவன்றன் றொழிலின்முடிக்கக்கூடும்போழ்திற், பூவென்றுசொலத்தகுநின்பொற்றாளுக்கென்புந்திதனைச்செலுத்தவருள்புரிகுர்ப்பேர், மாவென்று

---

† இணைவிழைச்சு - நாயகன் புணர்ந்துறுகாலம்.

‡ வேட்பேர்க்கோவளரும் பறம்பென்றது - முருகக்கடவுளெழுந்தருளி யிருக்குமலையெனவு மன்மதன் வீற்றிருக்கு முலையெனவுஞ் சிலேடைப் பொருட்டு.

வானவருக்கமரரென்றுவழங்குபெயர்தனைப்புரந்தமலைத் தோளைச்
சேர்ந், தேவென்றுமிளிர்விழிபொய்யிடைவாய்செய்வயானை மகிழ்
கொளும்பழநிக்கிறையாமேறே. (௭௬)

ஏறுகைக்குநுந்தையுடனெதிர்த்தவ்வீசனின் கவியையிகழ்ந்த
வன்பண்டிழைத்தநூற்குக், கூறுகைக்குமுன்மகிழ்ந்தோர்குகையுட்
பல்லோர்குழுவொடவன்றனைப்புரந்தகுணக்குன்றேயீ, ராறுகைக்
குமரகுருவேயடியேன்சொல்லுமருந்தமிழுக்கிரங்கியருளளிக் காமற்
கைம், மாறுகைக்குநன்கொடையார்மருவிவாழும் வண்பழநித்தலை
வாவாளாவதிதவென்னே. (௭௭)

வதிதனிலொண்டிரைக்கரத்தின்வாரிவாரிமணியிரைத்துத்திட
ராக்கும்வளஞ்சேர்செந்திற், பதிதனிலும்பிறைதவழும்பரங்குன்றத்
தும்பழமுதிர்தண்சோலைவளர்பறம்பின்கண்ணுந், ததிதனிற்பத்தரு
க்கருளத்தக்கதென்றுசாற்றுதிருவேரகத்துஞ்சைலந்தோறுநதிதனி
ற்சந்தனத்தினொடுநானாறுந்திருவாவினன்குடிக்கோனண்ணுந்தா
னே. (௭௮)

தானையிடைக்குடுக்காமற்றலையோடாதிதகையில்பொருளணிந்
துநடந்தருநுந்தைக்கு, மானையுறழ்விழிப்பரவைமகிழநன்சொற்று
வழங்கிவரும்பித்தனெனுமணிப்பேரேற்கு, மோனையுறுதமிழ்க்கவி
தைமொழியும்பொய்யாமொழிப்புலவனினக்குமுனமுட்டை யென்
றே, யேனையநற்பெயர்கள்பலவிருப்பச்சொன்னதெதுகருதிப்பழநி
மலைக்கிறைவசொல்லே. (௭௯)

சொல்லையமுதிடைக்கொண்டதோகைபாகன்றோன்றலைத் தெ
ன்பழநிமலைச்சோதிதன்னை, முல்லையொடுகோங்கிரண்டுமெகிழ்த்துச்
செய்யமுளரியிடைக்கிடையலர்ந்துமுன்றோனெனற், கொல்லையிடை
வளர்ந்தவள்ளிக்கொடியாற்புல்லுங்கொழுங்கனியைச் செழுங்கனி
யைக்குகப்பிரானை, வல்லையிலன்பினர்க்கருளும்வள்ளறன்னைமறவாத
மாந்தரினிப்பிறவார்தாமே. (௮0)

வேறு.

பிறப்பினொடிறப்பலைகள்பெற்றியினலைப்ப,
விறப்பவுமலக்கணுறமெற்கருளநீயே.

மறப்பினினியெத்திறமுய்கிற்பனுமைமாணச்
சிறப்பினொடுபூசைகொடிருப்பழநிவேந்தே. (௮௧)

தேகமொருமூன்றநணிசேர்ந்துணரினுங்கே
யேகமெனநிற்குமொளியெங்கள்பழநிக்கோன்
றோகைமயில்வாகனுயர்சுப்ரமணியன்றான்
போகமொடுமுத்திதருபொய்யிலொருதேவே. (௮௨)

ஒருத்திமுருகாவெனவுமைத்தளவிலன்றாள்
பெருத்கவிடர்தீர்த்தருள்செய்பெற்றிமையையுன்னி
யருத்தியொடுநின்சரணடைந்தனனமன்பின்
வருத்துழியொழித்தருள்கவண்பழநிவாழ்வே. (௮௩)

வாழ்ததநினதொண்புகழ்மணிப்பதமலர்க்கீழ்
தாழ்த்தமுடிபத்தியொடுசெந்தசமுநின்ன
கேழ்த்தவடிவங்கருதநற்பெயர்கிளத்த
வீழ்த்தகொடுமைப்பழநிவேலவரநல்கே. (௮௪)

நல்குரவினூற்றுயரநண்ணுசலகற்றிப்
பல்குரநிதித்திரள்பரிந்துதவுமுள்ள
மொல்குரவடுத்திடுமுடற்பிணியொழிக்கு
மல்குறுவளப்பழநிவள்ளல்பணிவோர்க்கே. (௮௫)

கேட்டவரமீயவலகேடில்பழநிக்கோன்
வாட்டமறுகந்தனிகர்மற்றுமொருதெய்வங்
காட்டவலிரேன்மலடிகான்முளையைநுந்த
நாட்டமுனர்நற்புலவிர்காட்டவலனொனே. (௮௬)

நானெனதெனுந்தொடர்புநைந்திடவெலாநீ
தானெனவுணர்ந்தமையவென்றருளல்சார்றாய்
மீனெனவருட்கணுறு † மென்மயிலிரண்டு
வானெனமகிழ்ந்தணையும்வண்பழநிமன்னே. (௮௭)

மன்னரனைவோர்தமையும்வன்சமரில்வென்ற
பன்னரியமொய்ம்புடையபார்த்திபர்தமக்கு

† மென்மயிலிரண்டு என்றது - வள்ளியம்மை தெய்வயானையம்மையை.

நன்னர்பழநிக்கண்வளர்நாதனருளின்றே
லின்னல்புரிகூற்றுவரினில்லைவெலுமொய்ம்பே. (௮௮)

பேதைமையினுனனிபெரும்பிழைசெய்தேன்பா
றீதறுகடைக்கணருள்சேர்த்தபழநிச்சேய்
பாதகமியற்றபனவற்கருள்பகுத்த
தாதையரனிற்பெரிதுதண்ணளியுளானே. (௮௯)

உள்ளபடிசொல்வதிதுவுன்றிருவடிக்கு
மெள்ளளவுமன்புசெயலென்றமிலெனென்னை
யள்ளனரகத்திடையமிழ்த்தலொழிபின்னர்
விள்ளருமெழிற்பழநிவேந்தபுகனீயே. (௯0)

வேறு.

நீயேபுரப்பையெனவேறுதெய்வநினைவற்றிருக்குமெளிய
நாயேன்குடும்பநனிநோயினுளுநலிவெய்துகின்றதழகோ
வேயேநிகர்ப்பவுயர்தோட்கிடைக்குமிளிர்மின்னிகர்க்குமலைமான்
சேயேசிறந்தபழநிக்கணோங்குசிமிலத்திலுற்றமணியே. (௯௧)

மணியேமணிக்குளொளியேயுயர்ந்தமறையிற்குறித்தபொருளே
கணியேகணிக்கவருநல்லருட்கோர்கடலேகடற்குளுலகி
னணியேயெனச்சொல்பழநிக்கணாழுமரசேநினைத்துனடியிற்
பணியேன்புரிந்தவதிபாதகங்கள்பலவுந்தவிர்த்தருளே. (௯௨)

அருவேவிளங்குமுருவேயினிக்குமமிழ்தேயெவர்க்குமறிவே
தருவேதருக்கொள்கனியேபுதைத்தனமேயரற்குமுனமேய்
குருவேகவின்றபழநிக்கிரியைந்தகுமராகுறிஞ்சியமரா
கருவேதனைக்குமிகவும்பயந்தகடையேனையாளமதியே. (௯௩)

ஆளாகிநின்னசிறுதொண்டியற்றியறியாதபொய்யனெனினு
மீளாதகாதலொடுநின்னைநாளும்வினையேன்வழுத்தவிலையோ
வாளாவிருத்தலழகோவருட்குமயிலேறியாளவருவாய்
கேளாதுநல்குபழநிக்கணேய்ந்தகிரியிற்கலந்ததுரையே. (௯௪)

துரையேவளங்கொள்பழநிக்கண்முன்புதுகடீரிடும்பனிமய
வரையேநிகர்த்தபுயமீதுகாவிவருமாமலைக்கண்வதிவோய்

வினையேய்கடப்பமலர்மாலைவேய்ந்தவிகிர்தாபுரப்பலெனவோ [யே
ருனாயேயெனக்குன்மணிவாய்களாறுளொருவாய்திறந்துமொழி
மொழியாமழைவென்றகுறமாதுகேள்வன் முருகேசனுழிதனினு
மழியாமலோங்குபழநிப்பொருப்பிலமர்வோன்சிவந்தபதமே
யொழியாமனுளுநினைவாயடைந்தவுறுகண்சடக்கவுலகில்
வழியாதுமின்றிமிகவுங்கவன்றுமயர்வெய்துகின்றமனமே. (௯௬)

மனமெய்திருந்தியறமாக்கலன்றிமறநாளுமாக்கியுனது
மூன மெய்தியினறுபுகழ்வோனையாளன்முறையல்லதென்று நினைவெ
சினமெய்தியேசுபவர்யாருமில்லைசிறியேனையாள்கவயலி [ஞ்
லனமெய்தியோங்குபழநித்தலத்திலமர்கின்றவாறுமுகனே. (௯௭)

முகமாமதத்தகரியிற்பிறங்குமுதல்வற்கிளையத்தவனுசா
நிகமாகமங்கள்பலவற்றினுக்குநிலையேகுணத்தினுலையே
மகமார்நலங்கொள்பழநிக்கிரிக்கண்வளர்வோயடுத்துமுனையிச்
சகமாயையினகண்முழுகிக்கிடந்துதமியேன்றயங்கறகுமே. (௯௮)

மேவார்புரத்தைநகைசெய்தெரித்தவிமலன்பயந்தபுதல்வா
பாவாணருற்றகழகஞ்செறிந்தபழநிச்சிலம்பமுறையா
ளுவாலுயர்ச்சிபெறுமாறெழுதலைநவிலாதபாவியெனையு
மோர்வாதகத்திலருள்கொண்டுகாத்தலுனையேபொறுத்தகடனே.

கடமாமுனிக்குநிகர்வோருரைத்தகவிபல்லகேட்டசெவியான்
மடமாரகங்கொள்சிறியேன்பகர்ந்தவழுவாணிறைந்தபனுவ
றடமாருளத்தின்மகிழ்கொண்டுகேட்டதமிழ்நூற்கருத்தனிடைநற்
றிடமார்வரங்கள்பழநிக்கணூர்ந்துதினமேற்றுவாழுமுலகே. (௧௦௦)

## பழநிப்பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்று.

[illegible]நாதன் சரணம்வாழ்க.

MAHAMAHOPADHYAYA
U. V. SWAMINATHAIYAR LIBRARY,
IRUVANMIYUR, MADRAS-41.

# சித்தாந்தவசனபூஷணம்.

இந்ஞானசாஸ்திரமானது வேதாகமசாரமாய் விளங்குவதும், திருவருட்பெருஞ் செல்வர்களாகிய விவேகாதி சர்வசாதன சம்பந்ரான நிஷ்காமாதிகாரிகள் அநுபவிப்பதும், சுத்தாத்துவித சித்தாந்த வுண்மையினை வுள்ளங்கை நெல்லிக்கனிபோ லெடுத்துக்காட்டுவதுமாகிய உண்மைஞானத்தினை, பதியிலக்கணம், பசுவிலக்கணம், பாசவிலக்கணம், சத்தசத்திலக்கணம், தசகாரியவிலக்கணம், அவத்தையிலக்கணம், உணர்த்துமுறையிலக்கணம், தீக்கையிலக்கணம், சாதனவிலக்கணம், ஞானவிலக்கணம், ஞானிகளிலக்கணம், அத்துவித முத்தியிலக்கணம் எனப் பன்னிரண்டு வகைகளால் விவகரித்து, தெளிவான வசனரூபமாகச் செந்தமிழ் நடையில் ஏது திருட்டாந்த பூர்வகமாயும், ஆட்சேப சமாதானங்களுடனும், பரபட்ச சுபட்சமாயும் எழுதி யச்சிடப்பட்டுள்ளது. மனிதப்பிறப்பை யெடுத்ததனா லடையவேண்டிய முக்கியப்பிரயோசனம் இச்சாஸ்திரத்தினா லடையலாமென்பதிற் றடையில்லை.

இதன் விலை ரூபா - க. வி. பி. சார்ஜ்[illegible]டன் [illegible] - ரூ - 0.

பூவை - சிவபூர[illegible]வியார்,
34 - முத்தமுத[illegible]
[illegible]லா வீதி, சென்னை